DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

| | |
|---|---|
| O.S.No. 363/2018 | DW 1 |
| Name : சுப்பிரமணியநாயுடு | Age |
| Father's Name | Village |
| Taluk | 16.07.2025 |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நவாதி சொத்தில் பங்கு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் அன்னதான காக்கவாக்கம் என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய மூதாதையர்களும் அங்கு தான் வசித்து வந்தார்கள். என் தந்தை உடன் பிறந்தவர்கள் மூன்று பேர். பெரியவர் பெயர் ராமநாயுடு, 2வது பிறந்தவர் பெயர் பாப்பையா நாயுடு, 3வது என்னுடைய தந்தை கண்ணையாநாயுடு. தாவா சொத்துக்களை வாய்மொழியாக தனிதனியே பிரித்து அவர்கள் அனுபவித்து வந்தார்கள். 1993ம் ஆண்டு தான் எழுத்து மூலமாக பாகபிரிவினை வந்தது. பாக பிரிவினை பத்திரத்தில் ராமநாயுடு மகன்கள் பி.ஆர் பார்த்தசாரதி மற்றும் பி.ஆர்.சந்திரன், என்னுடைய தாயார் கமலம்மாள் மற்றும் நான் அதில் கையெழுத்திட்டு இருந்தோம். அந்த பாகபிரிவினை எங்கள் 4 நபர்களுக்குள் ஏற்பட்டது என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர் என் அக்கா வசந்தாராணி. 1993ம் ஆண்டு நடைபெற்ற பாக பிரிவினை பத்திரத்தில் வசந்தாராணி தரப்பினராக சேர்க்கவில்லை. அவருக்கு திருமண ஆன சமயத்தில் அவருக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்ததால் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை. 1993ல் நடைபெற்ற பாக பிரிவினை தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பி அட்டவணை சொத்து என் பாகமாக வந்தது. அதே பி அட்டவணை சொத்தில் பெரியப்பா என் பாப்பையா நாயுடு எனக்கு உயில் எழுதி வைத்த சொத்தும் அந்த பி அட்டவணையில் அடங்கி உள்ளது, பாப்பையாநாயுடு உயில் எழுதிவைத்த சொத்து அவருடைய தந்தை அவருக்கு கொடுத்த சொத்தாகும்.

பாப்பையாநாயுடுவிற்கு வாரிசு இல்லாததால் அவர் என் பெயருக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தை தவிர்த்து 1993ல் நடந்த பாக பிரிவினையில் வேறு எந்த சொத்தும் எனக்கு வரவில்லை. அதே பாக பிரிவனை பத்திரத்தில் காணப்பட்டுள்ள சி அட்டவணை சொத்து என் தந்தைக்கு பாத்தியபட்டது எனக்கும் என் தாயாருக்கும் வந்தது. மேற்சொன்ன அனைத்து சொத்துகளுமே மூதாதையர்கள் சொத்துகள் என்றால் சரிதான். அந்த சொத்தில் 2 ஏக்கர் சொத்தை என் தாயார் விற்றுவிற்றார் மீதமுள்ள சொத்தை அவருடைய மகள் வசந்தாராணிக்கு உயில் மூலமாக எழுதிவிட்டார். என் தாயாருக்கு வந்த சொத்தில் எனக்கு எந்தவித பங்கும் அவர் எனக்கு கொடுக்கவில்லை. மேற்சொன்ன சொத்துக்களை நான்தான் அனுபவித்து வருகிறேன். எனக்கு வந்த சொத்துகளில் நிறைய சொத்துக்களை நான் விற்றுள்ளேன். வாதி யார் என்றே எனக்கு தெரியாது. வாதியின் தாயாரை எனக்கு தெரியும் அவருக்கும் எனக்கும் திருமணம் நடைபெற்றது. அவர் திருமணம் ஆகி ஒருசில நாட்கள் கூட என்னுடன் வசிக்கவில்லை. தாவா சொத்துகள் மூதாதையர்கள் சொத்து என்று தனக்கு பங்கு உள்ளதாக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் ஆனால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. நானும் என் மனைவியும் திருமணமான முதலே பிரிந்துதான் வாழ்ந்து வந்தோம். அதன் பிறகு நான் யாரையும் திருமணம் செய்யவில்லை. வாதி எனக்கு தான் பிறந்தார் என்பதை நிரூபிக்கும் பொறுட்டு இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் அதன் அடிப்படையில் எங்கள் இருவரிடமும் டிஎன்ஏ டெஸ்ட் ஏடுத்தார்கள் அந்த அறிக்கையில் வாதி எனக்கு பிறந்த பிள்ளை என்று தான் வழங்கப்பட்டுள்ளது.

(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.